விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 30 ஜுல்கஜ் 18 இதழ் 213
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-9-84

நாளை 1000வது ஆண்டு முடிசூட்டுவிழா

## தஞ்சைக் கோவிலினுள் ராஜராஜசோழன் சிலை!

(சென்னை)

தஞ்சை பெரிய கோவிலுக்குள் ராஜராஜசோழன் சிலையை பிரதமர் திருமதி இந்திரா காந்தி நிறுவுவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளார். நாளை ஞாயிற்றுக்கிழமை தஞ்சைக் கோவிலில் நடக்கும் 1000வது முடிசூட்டு விழாவில் பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொள்கிறார்.

சிலையை உள்ளே நிறுவுவதென்ற பிரச்னையில் மத்திய அரசு இதுவரை அனுமதி வழங்காமல் இருந்து வந்தது. ஆனாலும் பாரத தொல்பொருள் இலாகாவுடன் ஆராய்ந்து. மத கட்சித் தலைவர்களுடன் பேசி, கோவிலினுள் சிலையை நிறுவுவதென்ற கோரிக்கைக்குஅனுமதியை வழங்கியுள்ளார் பிரதமர் இந்திரா.



தஞ்சைகம்காயல அபிவருத்திக்கு தமிழ்நாடுஅரசு ஏழரை லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

★ தமிழ் மக்களின் பிரச்னை தீர

# சுயாட்சியே ஒரேவழி!

# 'தொண்டா' வலியுறுத்து

(கொழும்பு)

"தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைத் தாங்களே ஏற்படுத்தக் கூடிய வகையில் மாநில சுயாட்சி அமையவேண்டும். இதனையே நாம் சர்வகட்சி மகாநாட்டிலும் வலியுறுத்தினோம். ஆனால் அரசாங்கம் அதனை ஏற்கவில்லை என்று கிராமியத் தொழில்துறை அமைச்சரும், இ. தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

'தமிழ்மக்களின் பிரச்னைக்கு தனிநாடு தான் ஒரே தீர்வுஎன தமிழர்விடு தலைக் கூட்டணி உறுதியாக நின்றவேளையில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் விடயத்தில் இந்தியா தலையிட்டு, ஐக்கிய இலங்கையின் கீழேயே இப் பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென்று அது கூறியது

"இந்தியாவின் தலையீட்டின் பின்னரே த. வி. கூட்டணி இந்தியாவின் கூற்றை ஏற்றுக்கொண்டு தனிநாட்டுக்குப் பதிலாக தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய ஒரு மாற்று வழியை முன்வைத்தால் தாம் அதை தமிழ்மக்களிடம் சமர்ப்பிப்பதாக அது தெரிவித்தது.

"இந்த அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர் பிரச்னைக்

(8ம் பக்கம் பார்க்க)

மண்டைதீவுப் பகுதியில்

## ஆகாயத்திலிருந்து துப்பாக்கிப்பிரயோகம்!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு தெற்குக் கடல் பகுதியில் நேற்று முன்தினம் விமானத்திலிருந்து சிலமணி நேரம துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இக்கடல் பகுதி அதனையடுத்துள்ள தோட்டப் பகுதிகளின் ஊடாக துப்பாக்கி ரவைகள் சிதறுண்டன. பலத்த சத்தத்தையும் எழுப்பின.

இச் சம்பவத்தையடுத்து இப் பகுதி மக்கள் பெரிதும் கிலி கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் காலை பிளாஸ்டிக்

[8-ம் பக்கம் பார்க்க]

## கடத்தப்பட்ட வ.பி.போ.ச. பஸ் கரவெட்டியில் காணப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

கொடிகாமம் பஸ் நிலையத்தில் நேற்றுக்காலை வான் ஒன்றில் வந்த 6 துப்பாக்கி இளைஞர்கள், பிரயாணிகளையும் சாரதியையும் இறக்கிவிட்டு கனகம்புளியடி பஸ்ஸை கடத்திச் சென்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமையாததால் கொடிகாமம் சந்தையில் வழக்கம் போல் பெருந்திரளான மக்களும் வியாபாரிகளும் கூடியிருந்தனர்.

சரியாக காலை 9 மணிக்கு வான் ஒன்று வந்து சந்தியில் நடுவீதியில் நின்றது. 6 இளைஞர்கள் கைத்துப்பாக்கியுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## அருகருகே இரு சடலங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தில் ஒரு இளைஞனதும் யுவதியினதும் சடலங்கள் அருகருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளனர் மரணவிசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த இருமரணத்துக்கான காரணங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. [சூ]

## விவசாயப்பண்ணையில் துப்பாக்கிகள் கொள்ளை

### கிளிநொச்சியிலும் குண்டுச்சத்தம்!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் நேற்றுமுன்தினம் இரவு ஆறு இனம்தெரியாத நபர்களினால் துப்பாக்கிகள் மற்றும் பல பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

கொள்ளையடிக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் மற்றும்பொருட்கள் பற்றிய விபரம் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. இதுசம்பந்தமாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது

இதேவேளை நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கிளிநொச்சி நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப்பொன்று 3 இனம் தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாகவும் ஜீப் சாரதியான ஆறுமுகம் மகஸ்வரன் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கிளிநொச்சி நகரில் நேற்று இரவு 9 மணியளவில் பெரும்

[8-ம் பக்கம் பார்க்க]

# வடமராட்சியில் பூரண ஹர்த்தால்!

(புலோலி)

**மாணவர்களின் கோரிக்கைகளை முன்வைத்து வடமராட்சிப் பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி, கரவெட்டி ஆகிய பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

பஸ்கள், மினிபஸ்கள் ஓடவில்லை. சந்தை கூட இல்லை. அரசு அலுவலகங்களிலும் ஊழியர்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர்.

பொதுவாக வடமராட்சிப் பகுதியில் நேற்று முழுவதும் மயான அமைதி நிலவியது.

**யாழ். நகரில்**

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்றுக் காலை 11 மணியளவில் சில இடங்களில் குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து, கடைகள் இழுத்து மூடப்பட்டன.

நேற்று நண்பகலுக்கு முன்னர் ஒற்றைக்கதவுகள் திறந்து வியாபாரம் நடைபெற்றபோதிலும் பின்னர் கடைகள் மூடப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள்சேவையிலீடுபட்டிருந்தபோதிலும் பிரயாணிகள்குறைவாகவே காணப்பட்டனர். சனநடமாட்டமும் குறைந்திருந்தது, (மா)

## மட்டக்களப்பிலும் கடை அடைப்பு

**மட்டுநகரில்**

யாழ், மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் நடத்திய பூரண பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு மாணவர்களும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் இந்து, மத்தியகல்லூரியில் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினமிரவு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக் கல்லூரிக்கு நேற்று முன்தினமிரவு 15பேர் வானில் வந்து, காவலாளியை ஆயுத முனையில் பயமுறுத்தி கம்பியூட்டர், ரோனியோ இயந்திரம், தட்டச்சு, ஒலிப்பதிவு நாடாக்கள், தொலைக்காட்சிப் பெட்டி, டெக் ஆகியவற்றை கொள்ளையடித்துள்ளனர்

இக் கல்லூரி அதிபர் திரு.

[8-ம் பக்கம் பார்க்க]

மட்டக்களப்பில்

## வானொலி தொலைதொடர்பு கருவிகள் அபகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மூன்று உபதபாலகங்களில் வானொலித் தொலை தொடர்புக் கருவிகள் ஆயுத முனையில் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

கன்னன்குடா, கொக்கட்டிச்சோலை, மண்டூர் ஆகிய இடங்களின் உபதபாலகங்களிலேயே இவற்றின் உபதபாலதிபர்கள் ஆயுதமுனையில் மிரட்டப்பட்டு இனந் தெரியாதவர்களால் வானொலித்தொலை தொடர்பு கருவிகள்அபகரிக்கப்பட்டன

இம் மூன்று தபாலகங்களின வானொலித் தொலை தொடர்புக் கருவிகளும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

நாவற்குழி புகையிரத நிலையத்திற்கருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சீ. கே. சுப்பிரமணியம், 196, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1735)

86 ஶ்ரீ இலக்கத் தொடர் 250 N மொடல் ஹொண்டா சைக்கிள் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை, பொன்னுச்சாமி கோட்டத்தில் தொடர்பு கொள்க. 1766

நாவற்குழி சந்தியில் இருந்து 350 யார் தூரத்தில் தொழிற்சாலை அல்லது வீடு அமைக்கக் கூடிய 4½ (நாலரை) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: G மரியதாஸ், லீனஸ் கட்டிட மேல் மாடி, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 1749

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பலாலி வீதியில் (சத்தறந்தை) என்னும் 9 பரப்பு தோட்டக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சி. சிவசெல்வம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன். 1708

முழுமையான அச்சுக்கூடச் சாமான்கள் விற்பனைக்குண்டு. ஓட்டோமெற்றிக் பிளேட்டன் மெசின் – 36'' கட்டர் மெசின் மோட்டருடனும் உண்டு மதிப்பீடு ரூபா 4 லட்சம் வரை எதிர்பார்க்கப்படுகின்றது. விரும்புபவர்கள் உடன் கடித மூலம் தொடர்பு கொள்ளலாம். விளம்பர இல: 1715, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1715

கோண்டாவில் கிழக்கில், நல்ல சூழ்நிலையில் அமைந்த 3 பரப்பு 6 குழி காணியும், கிணறு, கல்வீடுடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்க: S. S. நவரத்தினம், சிவா பிறதேஸ், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. 1732

மிக நல்ல நிலையிலுள்ள டிராக்டர்பெட்டியுடன் Massey Ferguson 36 ஶ்ரீ 7000 தொடர் இலக்கத்துடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கௌரி ரெக்ஸ்ரைல்ஸ், 155, 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 1761

## தேவை

ஒலிப்பதிவுத்துறையில் முன் அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர் ஆண் பெண் இருபாலாரும் அனுபவச் சான்றிதழுடன் (பிரதி) விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1726 C/o ஈழநாடு, 1726

அனுபவமுள்ள பேக்கேஸ் (Bakers) உடனே தேவை. அரசாங்க சம்பள நிர்வாக சபை அடிப்படையில் வேதனம் வழங்கப்படும். வசந்தா பேக்கறி ஊர்காவற்றுறை. 1712

அரசாங்க பதவியிலுள்ள இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மணமகளுக்கு நற்பண்பும், நல்லொழுக்கமுமுடைய மணமகன் தேவை. அரச பதவியோ, வர்த்தகமோ, விவசாயமோ விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும், விளம்பர இல: 1755, ம/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1755

## தேவை

வீட்டில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு உதவியாக இருப்பதற்கு வயோதிபமாது தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 1760, C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1760

யாழ்ப்பாணம், ரேயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன்தேவை. நேரில் வரவும். 1763

## வாடகைக்கு

மானிப்பாய் ரோட்டில் Post Office ஒழுங்கையில் 3 அறை விருந்தை குசினி உட்பட மின்சார தண்ணீர் வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. 84/1 A, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 1742

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

ஊரெழுகிழக்கைச்சேர்ந்த காலஞ்சென்ற திருவிளங்கம் பாலச்சந்திரன் பெண் கலாவதிஎன்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/207

திருவிளங்கம் பாலச்சந்திரன்.
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி.
எதிராக

மனுதார்.

1. பாலச்சந்திரன் கலாதரன் (பராயமற்றவர்)
2. கந்தையா கனகசுந்தரம் (பராயமற்ற 1ம் எதிர்வாதியின் வழக்குப் பாதுகாவலர்)
ஊரெழு கிழக்கு,
சுன்னுகம்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 20 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்.

வரைவு
**க. குணரத்தினம்**
மனுதார்
சட்டத்தரணி.
1758

---

அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் கோயில் நிர்வாகசபைத்

## தேர்தல்

மேற்படி கோயில் நிர்வாகசபைத் தேர்தல் எதிர்வரும் புரட்டாதி மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் அம்பாள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவார்கள்.

**வே. கணேசன்**
செயலாளர்.

12-09-84. 1743

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், கல்லூரி வீதி, இல; 42/1, காலஞ்சென்ற கந்தையா மணிவாசகன் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

கந்தையா மணிவாசகன் கைம்பெண் விமலா,
42/1, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

— மனுதாரர்

வழ. இல: தத்துவம்/3793

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாத சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந் நீதிமன்றத்திற் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1984-ம் ஆண்டு ஆனி மாதம் 22ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு வைகாசி மாதம் 7-ம் திகதியாகியஇன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்

காரணம் காட்டும் திகதி 12-10-1984க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

**W. S. செந்தில்நாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி.

1745

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

குப்பிளான் ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா சதானந்தன் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/212

செல்லையா சதானந்தன் கைம்பெண் சாரதாதேவி கேணியடி, குப்பிளான், ஏழாலை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னா தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 20-ம் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்.

**கே. பரமநாதன்**
மனுதாரின்
சட்டத்தரணி.

1757

## கலைப்பீட முதலாண்டு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் ஆண்டுப் பரீட்சை அக்டோபர் இறுதி வாரத்தில் நடைபெறும். முன்னர் இப் பரீட்சை இம் மாதம் 19ம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

கலைப்பீடத்தின் ஏனைய பரிட்சைகளும் (இராமநாதன் நுண்கலைப் பிரிவு) உட்பட ஏற்கனவே குறிப்பிட்ட படி நடைபெறும் என துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபைக்கு 1985-ம் ஆண்டுக்குத் தேவையான வாகன மிருகவரி இலக்கத் தகடுகளை வழங்கும் பொருட்டுக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்வி கோர விரும்புவோர் இச்சபை அலுவலகத்தில் 1984-10-03-ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரையும் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான கேள்விப்பத்திரத்தை ரூபா 50/- காசுக்கட்டளை மூலம் கேள்விப்பத்திரக் கிரயமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**மு. பஞ்சலிங்கம்,**
பதில் செயலாளர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச்சபை.

யாழ். அபி. சபை
அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1984-09-12. 1764

## விவசாயப் பயிற்சி

ஒருவருடகால பொது விவசாயப்பயிற்சி. க பொ.த (சாதா) அல்லது தே பொ.க.த. பரீட்சை சித்தியடைந்திருக்க வேண்டும் 17—25 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனமடம், சுன்னுகம் என்ற முகவரிக்கு 26-9-84-ற்கு முன் அனுப்பவும். விடுதி வசதி இல்லை. உத்தேச பயிற்சி ஆரம்பம்: 22/10/84. (1759)

## Alliance Francaise

பிரெஞ்சு தூதுவராலயபண்பாட்டுக்கழகத்தின் அநுசரணையில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கும் பேச்சு மொழியிலும், பிரெஞ்சு மொழி கற்றுத் தரப்படும்.

16 மில்லி மீற்றர் பிரெஞ்சுத் திரைப் படக் காட்சிகளுக்கான விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்க:

**130, 1-ம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.** 1740

## அரிய சந்தர்ப்பம்

★ **ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்**
சகல விதமான றேடியோக்கள், ரெலிவிசன்கள், வீடியோ டெக் பழுது பார்க்கும்முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ COMPUTER PROGRAMMING (BASIC, COBOL)
கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **எலக்ரிக்கல் வயறிங்** ★ **எலக்ரிக்கல் வெல்டிங்**
இரண்டு மாத செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **மோட்டார் றீவைண்டிங்**
சகல வித றீவைண்டிங் வேலைகளும் செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ DIPLOMA in HOTEL MANAGEMENT, ★ FRENCH, ★ GERMAN
HOTEL களில் வேலைவாய்ப்பு பெறக்கூடியமுறையில் பயிற்சியளிக்கப்படும்.

**மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் 18-09-1984**

குறிப்பு: (I) சனசமூக நிலையங்களினூடாகப் பயிற்சி பெறவிரும்பும் மாணவர்களிற்கு சலுகை கட்டணங்களில் பயிற்சியளிக்கப்படும்.
(II) இம்முறை மட்டுமே இச்சலுகை கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும். விபரங்களிற்கு நேரில் அல்லது உங்கள் சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை)யாழ்ப்பாணம்

# இஸ்ரேலில் புதிய கூட்டரசாங்கம்!

# பெரஸ் பிரதமராகப் பதவி ஏற்ருர்!!

[டெல்அவீவ்]

இஸ்ரேலில் கூட்டரசாங்கம் பதவியேற்றது. தொழிற் கட்சித் தலைவர் சிமொன் பெரஸ் புதிய பிரதமராகப் பொறுப் பேற்றுள்ளார்.

ஜூலைப் பொதுத் தேர்தலின் பின்ஸ்திரமில்லாமலிருந்த ஆட்சிப் பொறுப்பை அடுத்து, தொழிற்கட்சித் தலைவர் பெரஸுக்கும், பிரதமராக இருந்த சமீனுக்குமிடையில் பல வார காலமாகப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. மற்றைய கட்சிகளையும் சந்தித்து இவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

120 அங்கத்தவர்களைக் கொண்ட இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் கூட்டாக தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதென்ற தீர்மானம் எடுத்த பின்னர் நேற்று முன்தினம் முழுவதும் புதிய அரசாங்கம் மீதான நம்பிக்கைப் பிரேரணை மீதான விவாதம் நடந்தது.

இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவு... களும் கிடைத்தன.

புதிய பிரதமராகப் பதவி ஏற்ற தொழிற்கட்சித் தலைவர் பெரஸ் அடுத்த இரண்டாண்டுகளுக்கும், சமீன் அதற்குப் பின்னரும் பிரதமர்களாக ரவு தெரிவித்து 89 வாக்குகளும். எதிராகப் 18 வாக்குகள் இருப்பர் எனத் தெரிவிக்கப் பட்டது.

புதிய பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் தமது உரையில், லெபனுனிலிருந்த இருந்து இஸ்ரேல் துருப்புகள் திருப்பி அழைக்கப்படுவார்களென்றும், அதற்குமுன்னதாக நடக்கும் சமாதானப் பேச்சுக்கு ஜோர்டான் மன்னர் ஹுசையினை அழைக்கப்போவதாகவும் சொன்னுர்.

## ஹைதராபாத்தில் நிலைமை சீராகின்றது

(ஹைதரபாத்)

ஆந்திரப்பிரதேசத்தில் எழுந்துள்ள குழப்பமான அரசியல் நிலைமையை அடுத்து பதற்றத்தோடுஇருந்து வரும் ஹைதராபாத்தில நிலைமை மெதுவாக சீரடைந்து வருகிறது.

பல இடங்களில் ஊரடங்குச் சட்டம் முழுநேரத்துக்கும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை பத்து இடங்களில் போடப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் பதின் மூன்று மணி நேரத்துக்கு தளர்த்தப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது.

## இணைந்தது

(சென்னை)

அடியாரின் 'அண்ணு கழகம்' எஸ்.பி. சோமசுந்தரத்தின் புதிய கட்சியோடு நேற்று இணைந்தது,

எம் ஜி.ஆரின் அமைச்சரவையிலிருந்து விலக்கப்பட்ட 'சோமு, அ தி.மு க என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே

## இந்திய எதிர்க்கட்சிகள் வற்புறுத்து!

# 'ஆந்திர அமைச்சரவையை கலைத்து ராமராவை மீண்டும் முதல்வராக்கவேண்டும்!'

[புதுடில்லி]

ஆந்திரப் பிரதேசத்தின் புதிய முதலமைச்சர் எம். பாஸ்கரராவ் தமக்குள்ள பெரும்பான்மையை முப்பது நாட்களுக்குள் நிரூபிக்கத் தவறியதால், அவரது அமைச்சரவையைக் கலைக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் ஜனுதிபதியைக் கோரியுள்ளனர்.

ராஷ்டிரபதி பவனில், ஜனுதிபதி ஜானி ஜெயில்சிங்கைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் மகஜரொன்றைக் கையளித்தனர். இந்த மகஜரில், ஆந்திரப் பிரதேசத்தின் நிலைமையில் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

என். டி. ராமராவை மீண்டும் முதல்வராக நியமித்து, இருபத்திஞன்கு மணி நேரத்துக்குள் சபையில்அவருக்குள்ள பெரும்பான்மையை நிரூபிக்கும்படி கோருமாறும், நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் ஜனுதிபதியைக் கேட்டுள்ளனர்.

''இதன்மூலம் அங்கு ஜனுதிபதி ஆட்சியைஏற்படுத்தவோ' அல்லது சட்ட சபை நடவடிக்கை நிறுத்தி வைக்கவோ கூடாது.

''ஆந்திரப் பிரதேச நிலைமை குறித்துப் பாராளுமன்றத்தில் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டி விவாதம் நடத்தவேண்டும்''

இவ்வாறு எதிர்க்கட்சியினர் ஜனுதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வாந்தி எடுத்து மயக்கமுற்ற 83 குழந்தைகள் ஆஸ்பத்திரியில்

(சென்னை)

சிதம்பரத்திலுள்ள சிறுவர் பாடசாலையொன்றில் இலவச மதிய உணவை நேற்று முன்தினம் உண்ட எண்பத்தி மூன்று குழந்தைகள் மயக்கமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனுதைக் குழந்தைகளுக்கான 133பேர்உள்ளனர். மதிய உணவு இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

சாப்பிட்ட கையோடு குழந்தைகள் வாந்தி எடுத்தனர். மயக்க முற்றனர். பாடசாலைக் குப்பொறுப்பானவர்கள் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக குழந்தைகளை எடுத்துங் சென்றனர்.

ஐந்து குழந்தைகளின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. 5 வயதுக்கும் 11 வயதுக்கும் உட்பட்டவர்கள் இந்தக் குழந்தைகள் உணவில் விஷம் கலக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப் படுகிறது.

# 'ஜெகனின்சுதந்திர வேட்கைக்கு வீர வணக்கம்!'

## தமிழீழ விடுதலைப்புலிகள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டுமென்ற உணர்வோடு பல தாக்குதல்களை அரச படையினருக்கு எதிராக ஜெகன் மேற்கொண்டுள்ளார் தமிழீழ விடுதலைக்காகப் போராடிய ஜெகனின் சுதந்திர வேட்கைக்கும் அவரது வீரத்துக்கும் நாம் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிருேம்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தீவிரவாத இயக்க (ரெலி) தலைவர் 'ஜெகனின்' மரணம் குறித்து வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளன.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''9-9-84 அன்று வட்டுக் கோட்டையில்வைத்து ஜெகன் எனும் விடுதலைப் போராளிமீது துப்பாக்கிப் பிரயோகம்செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்ற அன்று ஜெகன் இயக்கத்தினரும் எமது இயக்கத் தோழர்களும் ஒருவரை ஒருவர் இனங்கண்டு கொள்ளாத நிலையில் ஏற்பட்ட சம்பவத்தில் நாம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜெகன் மரணமானுர்.

''விடுதலைப் போராளிகள் எந்த இயக்கத்தினைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் அவர்கள் ஒருவரை ஒருவர் இனங்கண்டு செயற்படுவார்களாயின் இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவங்கள் நிகழ்வதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்'' என்பதாகும்,


யாழ்ப்பாணத்தில் பின்பலம் கொண்ட
ஒரே நிதி நிறுவனம்
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்
எந்த நிதி நிறுவனமும் வழங்காத அதி சிறந்த வட்டி.
33 1/3 வீதம் வழங்குகின்ருேம்.
நிலையான முதலீடு இரு மடங்காக 36 மாதங்களில் வழங்கப்படுகிறது.
திருமணம் – சுபநிகழ்ச்சிகள் அனைத்துக்கும்,
சிறந்த நண்பனுக விளங்குகின்றது.

மகாராஜா வைப்புச்சான்றிதழ்

மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றது

| செலுத்தும் தொகை | மகாராஜா வைப்புச்சான்றிதழ் | வட்டி வீதம் வருடாநதம் |
|---|---|---|
| ரூபா 2500 | ரூபா 5000 | 33 1/3 வீதம் |
| ரூபா 5000 | ரூபா 10,000 | 33 1/3 வீதம் |
| ரூபா 25,000 | ரூபா 50,000 | 33 1/3 வீதம் |
| ரூபா 50,000 | ரூபா 1,00,000 | 33 1/3 வீதம் |

யாழ். மாவட்டத்தில் நிலையான நிதி நிறுவனம்
themaharajaorganisation
மகாராஜா
முதலீட்டுநிதிநிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267



UNIQUE COMMUNICATION SERVICE
யுனிக்
கொமுயுனிக்கேசன்
சேர்விஸ்

நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக
24 மணிநேர சேவை
யாழ நகர அலுவலகம
28 18 - 1 1 மகாதமா காந்தி ரேட்,
(சலுசலவுகது அனைமையில)
யாழுபபாணம்.
ரெலெகஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழுமபு நகர அலுவலகம
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க வீதி, கொழுமபு :
ரெலெகஸ. - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066

### மணிவாக்கு

குப்பைக் கருத்துக்களை அடுக்கு மொழியில் அலங்காரமாக எழுதினாலும் அது குப்பை குப்பைதான்.
— பெஞ்சமின் பிராங்லின்

## நமது நோக்கு

# கனடாவில் புதிய ஆட்சி

வெளிநாடுகளில் உயர்ந்த தொழில், தொழில் நுட்ப உத்தியோகங்கள் தேடிப்போகும் இந்நாட்டுத் தமிழ் மக்களுக்குக் கனடா பெரும் வரவேற்பளித்துவருகிறது. இன்றைய நிலையிலும் பாதகமான மாற்றம் அங்கில்லை.

கனடாவின் பெருமை அதன் அண்டை நாடாகிய அமெரிக்க வல்லரசால் மறைக்கப்படுகிறது.

இன்று 20 வருடங்களுக்குப் பின் ஒரு புதிய ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பிரயன் முல்ரோனி கனடாவின் 18-வது பிரதமராக வருகிற திங்கட்கிழமை பதவியேற்கிறார்.

கனடா என்றால் தேசிய, சர்வதேச ரீதியில் பெயர் பெற்ற முன்னாள் பிரதமர் ட்ரூடோவின் பெயரே மக்கள் நினைவில்வரும். இவர் லிபரல் கட்சித் தலைவர் மட்டுமல்ல; நான்கு தடவைகள் பிரதமராக இருந்தது மட்டுமல்ல; சர்வதேசப் புகழுக்குரிய ஆளுமை படைத்த பெருந்தகை.

20 வருட ஆட்சியில் தமது பரந்த அரசியல் ஞானத்தினாலும், தாராளமான மனப்பான்மையாலும், கம்பீரம் நிறைந்த கவர்ச்சியாலும் கனடா மக்களை மட்டுமல்ல; ஐரோப்பிய, ஆசிய மக்களின் பெருமதிப்பையும் பெற்றவர்.

கடந்த 40 வருடங்களில் இன்று கனடாவின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி அடைந்திருப்பதை பிரதமர் பியர் ட்ரூடோ சமாளிக்க முடியவில்லை. தம்முடைய தனிப்பட்ட செல்வாக்கு குன்றாதபோதும் நாட்டின் நலன்கருதி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

இதனையடுத்து வந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி எதிர்பாராத வகையில் அமோக வெற்றி பெற்றுள்ளது.

45 வயதுடைய புதிய பிரதமர் திரு. பிரயன் முல்ரோனி அரசியலுக்கே புதியவர். தமது கட்சியின் தலைமைப் பதவியை 15 மாதங்களுக்கு முன்புதான்பொறுப்பேற்றவர்.

இன்று தோல்வியடைந்த லிபரல் கட்சியின் தலைமைப் பதவியை மூன்று மாதங்களுக்கு முன் 55 வயதான ஜோன் டேர்னர், ரூட்டோவிடம் பெற்றார்.

பொதுத்தேர்தலை அவசரப்பட்டு நடத்தியதால் நாட்டின் சரித்திரத்தில் மிகச் சொற்பகாலம் — 68நாள்— பிரதமராகவிருந்த பெருமையைத்தானே தேடிக்கொண்டார்.

கனடாவின் அரசியலில் கட்சி பேதங்கள், கொள்கை மோதல்கள் பெருந்தாக்கம் ஏற்படுத்துவதில்லை.

லிபரல் கட்சி நீண்ட காலம் ஆட்சி செய்ததற்கு தலைவர் ட்ரூடோவின் அளப்பரிய புருஷலட்சணமே பெருங்காரணமாயிருந்தது

அவருக்குப் பின் வந்த ஜோன் டேர்னர் 282 ஆசனங்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 40 ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது.

சில காலம் அரசியலில் அசமந்தப் போக்கைத் தழுவியிருந்த டேர்னர், கவர்ச்சியும் பொதுமக்கள் ஆதரவும் அற்ற அரசியல்வாதி.

கொள்கைகள் எவ்வாறிருந்தபோதும் தேசமக்களின் அபிலாஷைகளை அறிந்த வல்லவருக்கும் நல்லவருக்குமே கனடாவில் வெற்றிகிட்டும்.

கடந்த பல வருடங்களாகக் கனடாவைச்சீர்கெடுத்து வந்த மொழிப் பிரச்னை- ஆங்கில - பிரெஞ்சுப் பிணக்கு - இன்று பெருமளவிற்கு நூர்ந்து வருகிறது.

பல மொழி, மத, சாதி, கலை, கலாசாரம் கொண்ட மக்கள் வாழும் கனடாவில் எந்தப் பிணக்கும் தீர்க்க முடியாத அளவிற்குத் தலையெடுப்பதில்லை.

இன்று ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய பிரதமர் முல்ரோனியின் வெற்றி அவருடைய திறந்த மனப்போக்காலும் மக்களுடன் அளவளாவும் ஆற்றலாலும் கிட்டியது.

திரு. டேர்னருக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் பரந்த மனப்போக்கும் இருக்கவில்லை. வாக்குத் தேடும் முயற்சியில் பெண்பாலாருடன் நடந்துகொண்ட வகையில் அவர்களின் ஆதரவை இழந்ததும் தோல்விக்கு ஒரு காரணம்.

கனடாவில் இன்று பாப்பரசர் விஜயம் நடத்திக்கொண்டிருக்கிறார். அங்கு வந்தடைந்தபோது புதிய பிரதமர் அவரை வரவேற்கும் கௌரவத்தை ஏற்க மறுத்தார். அது இன்றும் பிரதமரான திரு. டேர்னருக்கே உரியதென்றார்.

சத்தியப்பிரமாணம் செய்து உரிய முறையில் பதவியேற்ற பின்னரேதான் பிரதமரென்ற ஜனநாயகக் கருத்தை கடைப்பிடித்திருக்கிறார். பாப்பரசர் நாட்டைவிட்டு வெளியேறும்போது பிரியாவிடைக்கு தலைமை தாங்கத் தயாராயிருக்கிறார்.

இவ்வித அபூர்வமான செய்திகள் எங்கள் நாட்டில் இடம்பெறும் நாள் எந்நாளோ?

## பீடிப் புகையிலைச் செய்கை

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்தில் மீண்டும் பீடிப் புகையிலைச் செய்கையை ஊக்குவிக்கவும், விவசாயிகளிடமிருந்து பீடிப் புகையிலையை கொள்வனவ செய்யவும் இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபன யாழ் கிளை முன்வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் கடந்த இரு வருட காலமாக இக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையில் இருந்து வந்தது. இப் பகுதியில் பீடிப் புகையிலைச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளுக்கு நல்ல இன விதைகளை விநியோகிக்கவும்.

பீடிப் புகையிலைக் கன்றுச் செய்கை பற்றிய இலவச ஆலோசனைகளை வழங்கி இச் செய்கையை ஊக்குவிக்கவும், இக் கிளை திட்டமிட்டிருப்பதாக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பீடி உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பீடி இலைகளையும், பீடித் தூள்களையும் 'பெர்மிட்' மூலம் விநியோகிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## இன்று பிறந்த தினம்:

# இலங்கைத் தமிழர் துயர்கண்டு துடித்தவர் அண்ணா!

[இன்று அறிஞர் அண்ணாவின் 76-வது பிறந்த தினமாகும்.]

பொன். மதிமுகராசா

(அமைப்புச் செயலாளர், அ. தி. மு. கழகம்)

பகுத்தறிவுவாதியாக தன் பொதுவாழ்வை ஆரம்பித்து அரசியல்வாதியாக மிளிர்ந்து - தேசிய இயக்கங்களையெல்லாம் ஆட்டங்காணச்செய்தவர் அறிஞர் அண்ணா. திராவிட பாரம்பரியத்தின் புகழை உலகறியச் செய்வதற்கு தன்னையே அர்ப்பணித்தபெருந்தகை அண்ணா. தமிழ்நாட்டு முதல் அமைச்சர் ஆனவுடன் தன் கனவை நனவாக்கி சென்னை என்றும், மற்றாஸ் என்றும் இருந்த நிலையை மாற்றி தமிழ்நாடு கண்டவர். தான்கண்ட தமிழ்நாட்டை இந்திய அரசியல் சாசனத்தில் புகுத்தி மகிழ்ந்தவர் அண்ணா.

அண்ணாவின் நா அசைந்தால், இயக்கத்தின் தம்பிகள் ஆயிரம்ஆயிரம் பேர் எதையும் செய்யத்தக்க தீரர்கள் தியாகிகள் இருந்தார்கள் - அண்ணா, பகுத்தறிவுவாதியாக, பயனுள்ள அரசியல்வாதியாக, வாதத் திறமைமிக்க பேச்சாளராக, பாமரர் புரிந்துகொள்ளும் எழுத்தாளராக, பண்புள்ள நகைச்சுவையாளராக, திரைக்கதை ஆசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, நாவல், தொடர்கதை இலக்கிய எழுத்தாளராக, மாற்றார் மதிக்கும் பண்பினராக, தமிழ்நாட்டின் பெர்னாட்ஷாவாக திகழ்ந்தார். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற அரசியல் நாகரீகத்தை கடைப்பிடித்தவர் அண்ணா.

இந்திய துணைக்கண்டத்தின் தென் மாநிலங்களில், பிராந்திய மேம்பாடுகள், மொழி உணர்வுகள், இன்று தொடர்கதையாக இருப்பதற்கு வித்திட்டவர் அண்ணா.

கண்ணீரில் மூழ்கிக்கொண்டிருந்த நம் தங்கத் தமிழின உய்விற்காக, உயர்விற்காக தன்னையே தாரைவார்த்திட்டவர் அறிஞர் அண்ணா.

இந்தியத் தாயவளின் கரம் பற்றி அவள் அருமைப் புதல்வியாய் - பூலோக அமைப்பிலேயே இருப்பது இலங்கைத் திருநாடு.

இங்கே பேசப்படும் அழகிய தமிழ் - அது இந்தியாவின் பரிசாகும்.

இலங்கையில் சுருதி ஒட்டமாய், இதயத் துடிப்பாய் நிலவி இவ்வெழில் நிலத்தை வாழ்வித்துக்கொண்டிருக்கும் பொருளாதாரமானது இந்திய திருநாட்டு மக்கள் - அந்த மலையகக் குடிமக்கள் தம் உழைப்பில் அளித்த பரிசாகும்.

இங்கே பேசப்படும் சிங்களமும், இந்தியத் திருநாட்டின் அழகு மொழிகள் சிலவற்றின் கலப்பினாலும், திரிபினாலும் உருவானதே என்பதானது குன்றிடை விளக்காகும்.

இனி, இங்கே; அங்கும்இங்குமாய், எங்கெங்கும் வைக்கப்படுகிறதே, வழிபடப்படுகிறதே ஒரு சிலை அந்த புத்தனின் எழிற்சிலை! அது ஓர் இந்திய தவப் புதல்வன் ஆசியப் பேரொளி - அந்த சித்தார்த்தனின் சிலை தானே? புத்தனும், அவன் தந்த போதனைகளும் இந்திய அறிவெழுச்சியின் ஒரு சுடரும் அதன் தாக்கமும் தானே?

இவ்வளவோடு சதை முடிகிறதா என்றால் இல்லை, மேலும் உண்டு அதனை வரலாறு கூறுகிறது.

ஒரு காலகட்டத்தில் புவியியல் ரீதியாகக்கூட அன்னை பாரதமும் தென்மகளாம்இந்த இலங்கையும், ஒரு நிலமாய் ஒரே நாடாய் இருந்துள்ளனவாமே!

பெண்ணொருத்தி தாய்மை கண்டு, அவள் வயிற்றிடை மகளொன்று உருவாகி, தாய், மகள் என்று இரண்டு உயிர்கள் திகழ்வதுபோல் காலத்தின் நியதியால் தாய் நாடான இந்தியாவினின்றும் இலங்கை பிரிய நேரிட்டிருக்கிறது.

இதனை அண்ணா அவர்தம் கனிந்த இதயத்தின் ஆழத்தில் ஊர்ந்தே செயற்பட்டு வந்தார்கள் என்பது அண்ணாவைப் புரிந்துகொண்ட நெஞ்சங்களுக்குத் தெரியும்.

தந்தை பெரியார் அவர்களைத் தன் ஒரே தலைவனாய்க் கொண்டு,

பாமரனாய், பஞ்சையாய், சபிக்கப்பட்டவர்களாய், சந்திலும், பொந்திலும், சாக்கடைகளிலும் தெரு ஓரங்களிலும் மரண உலகப் பய

(8ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் சிறப்பான யாத்திரைத்தலம்

# சாட்டி சிந்தாத்திரை மாதா!

## இன்று உற்சவம்

வேலணையின் வட கிழக்கேயுள்ள சாட்டிக் கிராமம், மூன்று பிரபல மதத்தவரிடையே விளங்கும் நல்லுறவுக்கும் அமைதிக்கும் எடுத்துக்காட்டாகத்திகழ்கிறது. அங்கே அழகுற அமைந்துள்ள சாட்டி மாதா கோவிலுக்குக் கிழக்கே முஸ்லிம் பள்ளிவாசலும் வடக்கே இந்து சமய ஆலயமும் அமைந்து ஒற்றுமையை உறுதிப்படுத்துகின்றன.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற வந்தபோது அந்நாளில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த துறையாக விளங்கிய சாட்டித் துறையையே நிழைவாயிலாக அண்மினார்கள் இவர்கள் எங்கெல்லாம்காலூன்றினார்களோ அங்கெல்லாம் தமது பாதுகாப்பிற்காக ஒவ்வொரு கோட்டையையும்' அக்கோட்டையினுள்ளே, பூச்சிதமாகப் போற்றும் புனிதரின் பெயரால் ஆலயம் ஒன்றையும் நிர்மாணிப்பது வழக்கம். அவ்வழக்கப்படியே போத்துக்கேயர் வேலணைத்துறையில் இறங்கி நங்கூரம் பாய்ச்சி கரையிறங்கு கோட்டை ஒன்றை அமைத்தனர், அக் கோட்டையினுள்ளே தமது கடற் பிரயாணத்தில் எவ்வித இடையூறுமின்றிக் கரை சேர்ந்தமைக்கு நன்றித் துதியாக 'சாகரத்து' அன்னையாக விளங்கும் புனித சித்தாதிரைமாதாவின்திருசுரூபத்தை அமைத்தனர். இவ் ஆலயமே சாட்டி அல்லைப்பிட்டி, மண்கும்பான் முதலான கிராமங்களுக்கு முதன் முதலாக அமைக்கப்பட்ட கத்தோலிக்க ஆலயமாகும்.

பேர்னடிற் அந்தோனிப்பிள்ளை

போத்துக்கேயரின் ஆட்சி வட ஈழத்தில் நிலைத்து நிற்கு மட்டும், கத்தோலிக்க மதம் தழைத்தது. போத்துக்கேய ஆட்சி அஸ்தமித்து ஒல்லாந்தரின் ஆட்சியேற்பட்டதும் கத்தோலிக்க மதம் வேரோடு அழிக்கப்பட்டதற்கு வரலாறு சான்று பகரும்.

இருநூற்றாண்டுகளுக்கு முன்னர் அழிந்துபோன சாட்டிக் கோட்டையில் மாதாசுரூபம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு கோட்டையின் மத்தியில்ஓலைக் கொட்டிலில் வைத்து வணங்கப்பட்டு வந்தது. ஆண்டுதோறும் நடைபெற்று வந்த வழிபாடுகளில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொள்ளத் தொடங்கினர் அன்னையின் அருள்பெற பக்தர்கள் 1789ல் ஒரு சிறிய ஆலயத்தைக் கல்லால் அமைத்தனர். இச்சிறிய ஆலயம்பின்னர் எரிந்துபோயிற்று. 1928ம் ஆண்டில் அதிவணக்கத்துக்குரிய கியோமர் ஆண்டகையின் ஆளுகையின்போது வண. அந்தோனி சுவாமிஅவர்களால் தற்போது காட்சிதரும் ஆலயக்கட்டிடம் ஆரம்பமாகியது பக்தர்களின் நன்கொடையால் ஆலயம் வெகுவிரைவில் முற்றுப் பெற்றது திருவிழாக்காலங்களில் இடவசதி போதாமை கண்டு அதனை மேலும் விஸ்தரிக்க எண்ணினர் இதன் பயனாய் ஆலய முகப்பினில் அலங்கார மண்டபம் ஒன்றுஅமைக்கப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியுற்ற ஆலயம் தற்பொழுது யாழ்குடா நாட்டுக்கே தனித்துவம் வாய்ந்த யாத்திரைத் தலமாகமிலிருகிறது கத்தோலிக்கர் அல்லாத பிறமதத்தினரும் அன்னையின் அருள் வேண்டி இங்குவந்து தாங்கள் பெற்ற வரங்களுக்காக நன்றி செலுத்திச்செல்லுகின்றனர் திருவிழாக்காலங்களில் மட்டுமல்ல சாதாரண நாட்களிலும் அன்னையின் பக்தர்களை ஆலயத்தில் காணக்கூடியதாகயிருக்கின்றது.

# "கணவனைப் பறிகொடுத்த என் இளம் மகளையும் பறித்துவிடாதீர்கள் என்று மன்றுடினேன்!"

(ஏ. வி. மாணிக்கம்)

''எனக்குப் பக்கத்திலிருந்த மகளின் சங்கிலியை துப்பாக்கி வைத்திருந்த ஒருவன் அறுத்தான். 'கணவனைப் பறிகொடுத்து விதவைக் கோலத்தில் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் என் மகளை விட்டுவிடுங்கள்' என்று சிங்களத்தில் எவ்வளவோ சொல்லிக் கெஞ்சிக் கதறினேன்''.

வவனியாவில் நடந்த கோரக் கொலையிலிருந்து தப்பிப் பிழைத்த ஐம்பத்திரண்டு வயதான பெண் அந்தச் சம்பவத்தை இப்படி விபரிக்க ஆரம்பித்தார்.

அந்தப் பயங்கரத்திலிருந்து மீளாத நிலையில் அவர் இருக்கிறார் என்பதை உணரக் கூடியதாக விருந்தது.

தொண்டை அடைக்க அவர் தொடர்ந்தார்:

பலகாலமாகக் கொழும்பில் வாழ்ந்த நாங்கள் 1977ல் நடைபெற்ற கலவரத்தின் போது எமது உடைமைகளை இழந்து யாழ்ப்பாணம் வந்தோம் அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்தில் குடும்பமாக வாடகை வீட்டில் வாழ்கிறோம்.

''எனது கணவர் பொலிஸ் 'டிபார்ட் மெண்டில் பிரதம லிகிதராக வேலைபார்த்தார் அண்மையில் அவர் இறந்து விட்டார்.

கடந்த 6ம் திகதி கொழும்பில் உள்ள உறவினரைப் பார்க்க எனது மகள்(26வயது) எனது பேரப்பிள்ளைகள்(12வயதும் 8வயதும் உடைய பெண் பிள்ளைகள்) மருமகள்(16வயது) ஆகியோர் சென்றிருந்தோம். நாங்கள் கிறிஸ்த்தவர்கள்.

## பக்திப் பாடல்கள்

பஸ்ஸில் டி.வி.யில் படம் ஓடியது அவ்வளவு நன்றாக இல்லை என்று சிலர் புறுபுறுத்துக்கொண்டதைத் தொடர்ந்து பக்திப்பாடல்கள் போட்டார்கள்.

''ஈரப்பெரிய குளத்துக்கு 2 மைல்களுக்குகப்பால் 'ரம்பாவ' என்ற இடத்தில் பஸ் மறிக்கப்பட்டதும் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் ஐந்து பேர் ஏறிக்கொண்டார்கள் இருவர் காக்கி சீருடை அணிந்திருந்தார்கள் மற்றவர்கள் சாதாரண நீளக்காற்சட்டை சேட் அணிந்திருந்தார்கள் பஸ்புறப்பட்டது.

பஸ் சிலதூரம் சென்றதும் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது ''ஒருவரையும் விட்டுவிடக் கூடாது இவர்களை முடித்துக் கட்ட வேண்டும்'' என்று அந்தத் துப்பாக்கி கொலைஞர்கள் சிங்களத்தில் பேசியது எனக்கு நன்றாகக் கேட்டது. என்நெஞ்சு பதறியது. என் மகளையும் பேரப்பிள்ளைகளையும் ஒருமுறை பார்த்தேன்.

## முதலில் சாரதி

''3 துப்பாக்கி வீரர் சாரதியைக்கொண்டு செல்ல மற்ற இருவரும் பஸ்ஸுக்குள் நின்றார்கள். எங்களை வெளியே சென்றுவிடாமல் பார்த்துக் கொள்வதற்கு நிற்பதுபோல் தோன்றியது.

''சிறிது நேரத்தில் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் ''ஐயோ! ஐயோ!'' என்ற அவலக்குரலும் கேட்டது.

''பஸ்ஸுக்குள் இருந்த நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கலங்கிக்கொண்டிருந்தோம். கதறினோம்-கத்தினோம், குளறினோம், கூச்சலிட்டோம்.

மீண்டும் அந்த மூன்று வீரர்களும் வந்தனர் முற்பகுதியில் இருந்தஇளைஞர்களில்10 பேரை எழுந்துவரும்படிசைகைகாட்டினர்கள் ''அந்த இளைஞர்களும் அழுது கொண்டே சென்றார்கள் சிறிதுநேரத்தில் ,பட பட வெனத் துப்பாக்கி வெடிக்சத் தங்கள் மரண ஓலங்கள்! 'அம்மா!அம்மா! என்று அலறினார்கள்!

பின்னர் அந்த மூன்று கொலைகாரரும் வந்து அடுத்த வரிசை யாகக் கொலைகளத்துக்குக் கொண்டு செல்ல– 10இளைஞர்களையும் நோக்கி ஒவ்வொருவராக வரும்படி சைகை காட்டினர்கள்.

## ஐந்து சகோதரர்களுக்கு ஒருவன்

''ஐயா!சாமிகும்பிடுகிறேன் 5 பெண்சகோதரர்களுக்கு நான் ஒருவன் தான் ஆண் பிள்ளை என்னை விட்டு விடுங்கள்! என்னைக்கொல்லாதீர்கள் ஐயா என்று சொல்லி அந்தப் பாதகன் காலில் விழுந்து கும்பிட்டான் ஒரு இளைஞர்.

''மன்றுடிய அந்த இளைஞரைப் பிடித்து இழுத்து வெளியில் விட்டார்கள் மற்ற இளைஞருடன் அவர்கள் அணுகியபோது போது தான் ஒரு சிங்களவர் என்று அறிமுகப் படுத்தி அதற்கு அத்தாட்சியாக பாஸ்போட், அடையாள அட்டைகளையும் காண்பித்தார். ஆதற்குச் செவிசாய்க்காமல் ''போடா'போடா'' என்று சிங்களத்தில் சொல்லிக் கொண்டு அந்த இளைஞரையும் மற்றும் 8 இளைஞரையும் தள்ளிக்கொண்டு சென்றார்கள் அதில் இரு முஸ்லிம் இளைஞர்களும் இருந்தனர்.

''அடுத்து துப்பாக்கிவெடிச் சத்தங்கள். அவலக் குரல்கள்!

''திரும்பவும் அந்த வெறியர்கள் வந்து பின் சீட்டில் இருந்த இரு இளம் தம்பதிகளையும் கூட்டிச் சென்றார்கள் ஐயோ! ஐயோ!என்று ஒரு ஆணின் குரல் பின்னர் கேட்டது

''கூட்டிச் சென்ற இளம் தம்பதிகள் தாங்கள் ஒரு முஸ்லிம் குடும்பம்என்றுசொல்லித் தங்களை விட்டு விடுமாறு மண்றுடி யும் கூட அவர்கள் மனம் இரங்கவில்லை!

''அதற்கிடையில் இன்னொரு இளைஞனை அவர்கள் பிடித்த போது, ''எங்கள் குடும்பத்தில் நான் ஒருவன் தான்; என்னை ஒன்றும் செய்யாதையுங்கோ ஐயா!'' என்று கெஞ்சி 'விக்கி விக்கி' அழுதான்.''

அந்த இளைஞரை இறங்கும்படி மெசின் கண்ணுல் அடித்தான் பின்னர் இழுத்துக் கொண்டு போய் சுட்டுப் போட்டார்கள்.

துன்பநாடகம் முடியும் நேரம் போலும், ஒருவன் எஞ்சியிருந்த எங்களை நோக்கி வந்தான்.

## அந்தப் பயங்கரத்தை தப்பிப்பிழைத்த ஒரு தாய் நடுங்கியபடி இங்கு சொல்கிறார்

எனது மகளின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்தெடுத்துக்கொண்டு எழும்பச் சொன்னான்.

## பேரப்பிள்ளைகள் அழுதார்கள்

எனது பேரப்பிள்ளைகள் இருவரும் 'அப்பாச்சி,எங்கள் அப்பாவையும் அம்மாவையும் நாங்கள் எப்பொழுது பார்க்கப் போகிறோம் என்று அழுதார்கள்!

''பயப்படாதையுங்கோ? உங்களுக்கு ஒன்றும்நடக்காது, தலையைக் குனிந்து கொண்டு இருங்கோ'' என்று பிள்ளைகளின் முதுகைத் தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தினேன்.

அந்த நேரம் பஸ்ஸிக்குள்ளிருந்த வயது சென்ற சிங்களப் பெண் ஒருவர் குறுக்கிட்டு, எனது பேரனைச் சுட்டுக் கொன்று போட்டீர்கள், அவனுடைய சடலத்தையாவது காட்டுங்கோ! மகே! புத்தா! மகே! புத்தா? என்று உரத்துக் கத்தினுர்.

ஏதோமனம் மாறிய அந்தக் கொலைஞன் ''உங்களைச் சுட மாட்டேன்'' இறங்கி எங்காவது ஓடுங்கோ; என்றார். பின்னர் அவனை அங்கு காணவில்லை.

## ஓடினேம் ஓடினேம்

பஸ்ஸிக்குள்ளிருந்த 6பெண்களும் சேர்ந்து இறங்கி ஓடத் தொடங்கினேம.

பாதை ஊடாக பாதுகாப்பான இடம்தேடி ஓடிக்கொண்டிருந்தபோது 6 ஆண்களைக் கண்டு திகிலடைந்தோம்.

அவர்களும் எங்களுடன் இருந்து தப்பிச் சென்றவர்கள் தான் என்று பின்னர் அறிந்ததும் ஆறுதலடைந்து அவர்களுடன் சேர்ந்து பற்றைகளுக்குள் பதுங்கிக் கொண்டோம்.

''எங்கே இருக்கிறோம் என்று அறிய விடியும்வரை விழித்திருந்தோம். விடியும் நேரம் சற்றுத் தூரத்தில் வீடுகள் இருப்பது தெரிந்து அங்கு சென்றோம். குடிசை வீடுகள். வீட்டாரை எழுப்பி தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு அவர்களுக்கு நடந்த சம்பவத்தை விபரித்தோம்.

பின்னர் ரோட்டுக்கு வந்து அந்த பயங்கர சம்பவம் நடந்த இடத்தை நோக்கினேம்.

இறந்தவர்களின் உடல்கள் சின்னபின்னமாக வைக்கப் பட்டிருந்ததைக் கண்டேன்

''பஸ்ஸுக்குள் ஏறும் படியில் ஒரு இளைஞன் குற்றுயிரோடு முனகிக்கொண்டு சரிந்து கிடந்தான்.

அவனையும் தாண்டி பஸ்ஸுக்குள் பாத்தபோது எங்கள் பாக்குகள் வெட்டப்பட்டு எமது பணம், உடுபிடவைகள் எல்லாம் சூறையாடப்பட்டிருந்ததைக் கண்டோம்.

இறங்கிவந்து மீண்டும் அந்த இளைஞர்களை நோக்கியபோது இரத்த வெள்ளத்தில் மிதந்திருக்கக் காணப்பட்டார்கள்.

''இந்த அப்பாவி இளைஞர்கள் என்ன பாவம் செய்தார்கள்! ஆண்டவனே! என்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு மனதை விட்டகலாத துயரத்தை நெஞ்சில் நிறைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிவந்த பஸ்ஸில் வந்து சேர்ந்தோம்.

# "ராணுவம் சம்பந்தமில்லை"

(கொழும்பு)

வவனியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பஸ்பிரயாணிகள் படுகொலையில் இராணுவம் சம்பந்தப் படவில்லை என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வெளிநாட்டுப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கொள்ளையர்களே இப்படு கொலையைச் செய்துள்ளார்களென்றும் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்,

[யாழ்ப்பாணம்]

கொட்டடி ஸ்ரார் சன சமூக நிலையத்தினரின் சிரமதான வேலைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

# கட்டிவைக்கப்பட்ட இருவரையும் பொலிஸார் 'அழைத்து'ச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில்நேற்றுமுன்தினம் மின்சாரத்தூண்களில் கட்டி வைக்கப்பட்டிருந்த இரு நபர்களையும் பொலிசார் 'அழைத்துச் சென்று பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலையாழ். ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் அந்தனிதேவாஎன்பவர் யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மின்சாரக் கம்பத்தில் வைத்து கயிற்றினுல் கட்டி வைக்கப்பட்டிருந்தார்.

இவரது கழுத்தில் தொங்க விடப்பட்டிருந்த அட்டையில் ''கொள்ளை, வழிப்பறி, கப்பம் கேட்டல், பணமோசடி போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்தவர் என்றும் 11 மணியளவில் கட்டுக்களை அகற்றி விடும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்து யாழ். செயலகத்துக்கு முன்பாக கண்டிவீதியில் உள்ள தந்திக்கம்பத்தில் எம் ராசலிங்கம் (27 வயது) என்பவர் கயிற்றினுல் கட்டி வைக்கப்பட்டிருந்தார்.

இவரது கழுத்திலும் தொங்கவிடப்பட்டிருந்த அட்டையில் கொள்ளை போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்தவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டி வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு இத்தண்டனை வழங்கியவர்கள் ''தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள்' என்றும் அட்டைகளில் எழுதப் பட்டிருந்தன.

தண்டனை முடியும் நேரத்துக்கு முன்னர் 10 மணிக்கும், 10 45க்கும் இடையில் ஆயுதப் படையினர் சகிதம் வந்த பொலிசார், கட்டிவைக்கப் பட்டிருந்த இரு நபர்களையும் மீட்டுச் சென்று யாழ். பொலிஸ் நிலையப் பாதுகாப்பில் வைத்துள்ளனர். (மா)


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

தற்போதைய சூழ்நிலை கருதி
16-9-84 ஞாயிறு முதல்
**பகல் பஸ் சேவை**

புறப்படும் இடம்: கன்றுதிட்டி சந்தி,
புறப்படும் நேரம்: 7-30 மணி காலை

**டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்**

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட், கன்றுதிட்டி. தொலைபேசி; 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர், இல 6, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம். தொலைபேசி: 23596
3. நியூ ப்ரசீதா, இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22480

4- 1-10-84 முதல் அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, தொலைபேசி: 22608



## "ஓரியன்ஸ்" துவிச்சக்கர வண்டிகள்

எலக்ரோ பிளேற்றட் றிம், நாஷனல் டைனமோசெற், B/90 சீற், கோபா கரியர், சைற் ஸ்ராண்ட், பெல், பம்ப், சாவிகள், ஓயில் கான் முதலியவைகளுடன்

**கறுப்பு நிறம் ரூ. 2300-00**

கவர்ச்சியான பச்சை, சிவப்பு, நீல நிறங்களில் ரூ. 2200-00

ரயர், ரியூப் உட்பட நூறு வீதம் யப்பானிய தயாரிப்பு.
சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால் உங்கள் தேவையை பூர்த்திசெய்யுங்கள்.

## சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.

ஆஸ்பத்திரி வீதி, – தொலைபேசி: 22134 – யாழ்ப்பாணம்.

★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2 வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருக்கும் இ. துரைராஜா யாழ். பல்கலைக் கழகத்தில் கல்விமுதுகலைமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டமும் [பி. எஸ்ஸி] பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்புளோமாப் பட்டமும் பெற்றவராவர்.

தமது முதுகலைமானிப் பட்டத்துக்கு இவர் யாழ். மாவட்ட ஆரம்ப பாடசாலைகளில் கற்பித்தல் நுணுக்கங்கள் என்னும் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தார்.

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—30(15.09-1984)
வாரம்—சனி
திதி—பஞ்சமி இரவு 9-21 வரை
நக்ஷத்திரம்— பரணி பிற்பகல் 4-56 வரை

மேடம்:-இன்னலின்பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் இதயபாரம் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

இடபம்:- தாம்பத்தியவாழ்வில் அன்புதவழும் வாழ்க்கையில் தரம் உயரும் காதலர்கள் வாழ்வில் கற்கண்டான நாள்.

மிதுனம்: சகோதரவழிச்சஞ்சலத்திற்கும் இடமுண்டு குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றிகாணும்.

கடகம்:- தடைப்பட்ட காரியங்கள் நல்லமுடிவுக்கு வரும் தாய்வழிப் பெருமையுமுண்டு வாகன நலனுடன் வரவும் சுகம்காணும்.

சிங்கம்:- நீண்டநாள்கடன் மீண்டும் வந்துசேரும் பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படும் புத்திரர்களாலும் புகழ்கிடைக்கும்.

கன்னி:- எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கும் அற்பவிடயத்துக்குகூட பொல்லாங்கு கேட்கநேரிடும் சீறிவரும் கோபத்தையடக்கவும்

துலாம்:- களஸ்திரவழியால் கனிவானசம்பவங்களுக்கு இடமுண்டு வாழ்வுப்பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும் பொருள்வரவிலும் திருப்திகரமான நிலைதென்படும்.

விருச்சிகம்:- புதியதலையிடி தலைதூக்கும் வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும் மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருந்தால் நன்று.

தனுசு:- தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும் தெய்வநம்பிக்கை மேலிடும் நினைத்ததை சாதிப்பதில் இன்றுமுன்னணியில்நிற்பீர்கள்

மகரம்:- தொழில்துறையில் முன்னேற்றம் மந்தம் காணும் பகைத்தவர்களே பாராட்டச் செய்வார்கள் நிம்மதிபிறக்கும்.

கும்பம்:- நினைத்தகாரியத்தில் வெற்றியுண்டு எதிர்பாராதவகையில் ஆதரவுபெருகும் பணவிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும்.

மீனம்:- முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் சேவை

[மன்னார்]

தலைமன்னார்- ராமேஸ்வரம் கப்பல் சேவை காலநிலை சீர்கேடு காரணமாக எதிர்வரும் அக்டோபர் மாதம் 20 ம் திகதி முதல் இடைநிறுத்தி வைக்கப்படும்.

இக் கப்பல் சேவை மீண்டும் எதிர்வரும் ஜனவரிமாதம் 4 ம் திகதி ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை தலை மன்னார் ராமேஸ்ரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்று வரும் பிரயாணிகளின் தொகை தற்போது அதிகரித்து வருகிறது.

வாராந்தம் ரூ.15,000/= ரொக்கப் பரிசு

திங்கட்கிழமைகளில் ரூபவாஹினி - இரவு 7.45க்கு
செவ்வாய்க்கிழமைகளில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை - இரவு 7.00க்கு



ரேகா
செப்டெம்பர் 3 முதல்

நெஸ்பிரே பருகி வெற்றி பெறுங்கள்

நெஸ்பிரே வெற்றியாளர் போட்டி

நெஸ்பிரே பக்கெட்டின் பின்புறம் பாருங்கள். உலகப் படம் ஒன்றையும் ஆறுநாடுகளில் நெஸ்பிரே அருந்தும் ஆறு பிள்ளைகளின் வர்ணப் படங்களையும் காண்பீர்கள்.

பிள்ளைகளுக்குரிய நாடுகளைச் சரியாகத் தெரிந்து பக்கெட்டின் பின்புறத்திலேயே உள்ள விடைக் கூண்டை நிரப்பி அனுப்புங்கள்.

போட்டி விபரங்களும் கூப்பனும் பக்கெட்டின் பின்புறத்தில்

வாராந்தம் மூன்று பேருக்குத் தலா ரூ. 5000-

இப்போட்டிக்கான சகல விபரங்களும் நெஸ்பிரே பக்கெட்டின் பின்புறத்தில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாரமும் சரியான விடைகளை அனுப்புவோரில் மூவருக்குத் தலா ரூ 5000/- பரிசாக வழங்கப்படும்.

வெற்றிபெறுவோரின் பெயர்கள் 'ரேகா' தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் பத்திரிகைகளிலும் அறிவிக்கப்படும். செப்ரெம்பர் 3க்கும் நவம்பர் 19க்கும் இடையே இந்தப் போட்டி நடத்தப்படும். தாமதியாமல் உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்

நீங்கள் பல முறை பரிசு பெறலாம்

விரையுங்கள்! இன்றே ஒரு பக்கெட் நெஸ்பிரே வாங்குங்கள், மீண்டும் மீண்டும் வாங்கிப் போட்டியில் வெற்றி பெறும் வாய்ப்பை அதிகரியுங்கள். வாராந்தம் ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். ஒவ்வொரு முறையும் நெஸ்பிரே பக்கெட்டின் பின்புறமுள்ள விடைக்கூண்டையே பயன்படுத்த வேண்டும். நெஸ்பிரே அருந்துவோர் சுலபமாக வெற்றிகாண்பர்






நெஸ்பிரே 400 கிராம் ரூ. 27-90

வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5497

**ஹரன்** *(யாழ். நகர்)*
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
**அரசகட்டளை**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Jan - Michael Vincent
DAMNATION ALLEY
Thrilling - Adventure

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-மஞ்சுளா
**உத்தமன்**

**Shanthi** (JAFFNA)
10-30, 2-30, 4-45and 7-00
Fred Williamson.
''THE SOUL OF NIGGER CHARLEY''
Scope! Color!! Action!!!

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
**அன்பே வா**
(புதியபிரதி)

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 4-30
AMSTERDAM KILL
(color-action-packed)
கோரக் கொலை, மர்மம், திகில் நிறைந்த சித்திரம்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00
ஜெய்சங்கர்
தேங்காய் சீனிவாசன்
**காதலிக்க வாங்க**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**வந்தாளே மகராசி**

## அன்பளிப்பு நிகழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

கடந்த 1983 ஜூலை கலவர காலத்தில் கொழும்பிலிருந்து லொறி மூலம் எரிபொருள் எடுத்துக் கொண்டு வரும் வேளையில் லொறியுடன் சேர்த்துக் கொளுத்தப் பட்டதினால் உயிரிழிந்த புலோலி பல நோக்குகூட்டுறவுச் சங்கத்தின் மூன்று ஊழியர்களினதும் குடும்பங்களுக்கு கூட்டுறவ ஊழியர் தொழிற்சங்கப் பணம் அன்பளிப்பு செய்யும் நிகழ்ச்சி நாளைஞாயிற்றுக்கிழமையாழ். நகரிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## ரூபவாஹினி

மாலை

5-30 வேர்ல்ட் ஒவ்ஸ் ரோறீஸ் [ஆங்கிலம்]
5-45 நியூஸ் பைடர்மேன் [ஆங்கிலம்]
6-15 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 ஜெமினி மேன்
8-15 செய்திகள் [சிங்களம்] [ஆங்கிலம்]
8-35 நாடகம் [சிங்களம்]
9-05 இசை நிகழ்ச்சி [சிங்களம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 இலங்கை இங்கிலாந்து லோட்ஸ் கிரிக்கெட் டெஸ்ட் பந்தய 5ம் நாள் ஆட்டத்தின் முக்கிய கட்டங்கள்
10-30 உலகச் செய்திகள்
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
Coming Home
(Strictly for adults-Sex)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30. 4-45,
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 17-9-84 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
TEN
(Adults only)

## வானொலி இன்று

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீ பத்மநாபசுப்ர பாதம்-சீதாமணி ஸ்ரீனிவாசன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கத்தோலிக்க நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக் கச்சேரி ஸ்ரீ தரன் வேல் முருகு
9-15 தமிழ்மூலம் சிங்களம்
9-30 நாட்டுப்பாடல்
9-45 தகவல் எஸ். ஜி. என். புஸ்பரத்தினம்
10-00 சங்கமம்
10-30 கதைப்பாட்டு 'ஊமையன்' பாலாம்பிகை நடராஜா
10-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு
11-30 மாணிக்கமாலை
11-50 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்களஞ்சியம்
6-30 இசைப்பயிற்சி
6-45 லயவின்யாசம்

இரவு

7-00 நாட்டுக்கூத்து யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது
7-30 உலகச் செய்திகள்
7-40 மெல்லிசைத்தேர்வு எஸ். அம்பிகா
7-45 செய்திச் சுருள்
8-00 முஸ்லிம் சி நிகழ்ச்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப் பாடல்கள்
9-30 நாடகம் சலனம், சஞ்சலம், சாந்தி - எழுதியவர் ஜெயலீலா
10-00 நாதஸ்வர பிருந்த கானம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை
10-30 ஹிந்திபஜன்
11-00 ஒலிபரப்புமுடிவு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கம்பிகளை ஏற்றியிறக்குவதற்கான கூறுவிலை

அத்துருசிறியாவிலுள்ள இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்திலிருந்து 30 அடி நீளமுள்ள 40 மெற்றிக் தொன் நிறையுள்ள இரும்புக் கம்பிகளை யாழ். மாநகராட்சி மன்றக் களஞ்சியத்திற்கு ஏற்றிக் கொண்டு வந்து இறக்குவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் ஏற்றியிறக்கும் பிரபல ஸ்தாபனங்களிடமிருந்து கோரப்படுகின்றன. ஏற்றியிறக்கும் கூலி கூறுவிலைகளில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

26-09-1984 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை கூறுவிலைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்,

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-09-1984.
(1768)

## SIVAKEE Poly Technical Institute

MANIPAY.

எமது நிறுவனத்தில் பின்வரும் வகுப்புகள்
**மிகவும் குறைந்த செலவில்**
அனுபவமும், திறமையுமுள்ள முதல்தரமான CHARTERED ENGINEERS, ACCOUNTANTSஆல்
27-9-84 காலை 9-00 மணிக்கு விரிவுரை வகுப்புகள் ஆரம்பமாகும்
20-9-84 தொடக்கம் பதிவு செய்யலாம்.
23-9-84 நேர்முகப்பரீட்சை.
உடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

**LOND. EXAMS**

1 .QUANTITY SURVEYING 2. எலெக்ரிக்கல் எஞ்ஜினியரிங் 3. ரெக்னீசியன் DIPLOMA IN CIVIL ENG AND BUILDING 4. DIPLOMA IN DRAUGHTSM ANSHIP 6. I. C.M.A. A and B (85) I.A.A. PART I. 7. CHARTERED PRELIMINARY.

முகவரி:
**Sivakee Poly Technical Institute**
மூளுமலை வீதி, மானிப்பாய்.

சினி வீடியோ ஸ்தாபனத்தாரின்
**நன்றி கலந்த நல் வாழ்த்துக்கள்—★**

இரண்டாண்டுகளாக எம்மை ஆதரித்த அனைவருக்கும் இன்றைய தினம் நன்றி கலந்த
**நல்வாழ்த்துக்களை**
தெரிவிக்கின்றோம்.
இவ்வாண்டு உங்களை மகிழ்விக்க
**புதிய வீடியோ படங்களை**
இறக்குமதி செய்துள்ளோம்.
வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதே
**சினி வீடியோவின் பணி**

கிளை:
## சினி வீடியோ
253/1, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
**சினி வீடியோ** 2561/2, காலி வீதி, கொழும்பு 6
தொலைபேசி: 580620
(1767)

## காணிகள், ஆதனங்கள் விற்பதற்கும் வாங்குவதற்கும்

பிறநாடுகளிலுள்ள எங்கள் வாடிக்கையாளர் பலருக்காக

**யாழ். மாவட்டத்தில் காணிகள், வீடுகள், தோட்டங்கள் முதலியன வாங்கவும், அவர்களுடைய ஆதனங்களை விற்கவும் பொறுப்பேற்றுள்ளோம்**

அத்துடன்

**உள்ளூரிலும் காணிகள் வீடுகள் வாங்கவோ விற்கவோ பொறுப்பேற்றுச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் மேற்கொள்ளுகிறோம்.**

அனுபவமும் திறமையுமுள்ள எங்களுடைய நில அளவையாளர் பெரிய காணிகளை அளந்து தோதான சிறுசிறு துண்டுகளாகப் பிரித்து விற்றுத்தருவார்கள்.

**நாட்டமுள்ளவர்கள் காணி உறுதிகளுடனும், அளவுப் படங்களுடனும் எங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.**

ADDRESS :
37/2, Kachcheri-Nallur Road,
CHUNDIKULI
JAFFNA
Tel : 22782

**Bhoomiputhra Enterprises**
REAL ESTATE AGENTS.
Managing Partners :-
C. Balasingam, Attorney-at-Law
C. C. Cumarasamy, F.S.I Surveyor

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

## கொழும்பு ஸ்ருடியோ

## ஜீப், மினி வானை

# துப்பாக்கி இளைஞர்கள் கடத்திச் சென்றனர்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கச்சேரிக்கு சொந்தமான ஜீப் ஒன்று நேற்றுக் காலை இனம்தெரியாத இரண்டு துப்பாக்கி இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டது.

இந்த ஜீப் கிளிநொச்சி கச்சேரி காணி அலுவலகத்தில் நின்ற நேரத்திலேயே கடத்தப்பட்டது. இது தொடர்பாக ஜீப் சாரதி முத்தையா பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கடத்தப்பட்ட ஜீப் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை

இதேவேளை பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 'மினிவான்' ஒன்று நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாத இரண்டு துப்பாக்கி இளைஞர்களினால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக வான்சாரதி விஜயசிங்க கிளிநொச்சி பொலிஸில் புகார்செய்துள்ளார்.

பின்னர் இந்த வான் கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. (சூ)

## கடத்தப்பட்ட வ.பி.போ.ச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கினார்கள் எல்லோரும் சாரமும், ரிஷேர்ட்டும் அணிந்திருந்தனர். சந்தியில் துப்பாக்கி இளைஞர்கள் என்ற கதை அடிபட்டதும் சந்தை கலையத் தொடங்கியது. மரக்கறி சாமான்களைவிட்டு வியாபாரிகள் ஓடத்தொடங்கினார்கள் சந்தியில் நின்ற வாகனங்கள் திடீரென புறப்பட்டன.

யாழ்ப்பாணம் செல்லவிருந்த பஸ் ஒன்றில் ஏறிய இளைஞர் ஒருவர் பிரயாணிகளை இறங்கச் சொன்னார். மற்றவர்கள் துப்பாக்கியுடன் சென்று கடைகளைப் பூட்டச் சொன்னார்கள். ஒருவர் ஒவ்வொரு கடைக்கும் சென்று ''கடைகளை மூடுங்கள்'' என்றார். கடைக்காரர்கள் கடைகளைப் பூட்டினார்கள். பின் ச்சாய் வீதியில் நின்ற கார்களை எடுத்துச் செல்லுமாறு கூறினார்கள்.

கடைகள் பூட்டப்பட்டதும் துப்பாக்கி ஏந்திவந்த இளைஞர் கனகம்புளியடி பஸ்ஸிற்குள் ஏறி பிரயாணிகளை இறங்கும்படி கூறினார். பின்னர் சாரதியிடம் 'பஸ் தேவை' என்று கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்து பஸ்ஸை எடுத்து பருத்தித்துறை வீதிநோக்கி சென்றார். பஸ்ஸில் அவருடன் மற்றும் 2 இளைஞர்கள் முன்வாசலிலும், பின்வாசலிலும் நின்றனர். பஸ் சென்றதும், சந்தியில் நின்ற வானில் மற்றும் 3 இளைஞர்கள் ஏறிக்கொண்டனர். வான் சந்திக்கு வந்து பின் பருத்தித்துறைவீதி நோக்கிச் சென்றது.

### பிந்திய செய்தி

கொடிகாமத்தில் நேற்றுக் காலை கடத்தப்பட்ட வட பிராந்திய போக்கு வரத்துச் சபைக்குரிய பஸ் கரவெட்டியில் நிற்பதாக யாழ்.டிப்போவிற்கு நேற்றுமாலை தகவல் கிடைத்துள்ளது. இந்த பஸ்ஸை டிப்போவிற்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## சுயாட்சியே..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தீர்வுகாண மாநில சுயாட்சியே ஒரே வழியென நாம் சர்வகட்சி மகாநாட்டில் எடுத்துக் கூறினோம். எமது தீர்மானத்தை சகல தமிழ்க்கட்சிகளும், இந்து இயக்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால் அரசாங்கம் அதனை ஏற்கவில்லை'' என்றார்,

## இ. தொ. கா மகாநாடு

இ தொ. கா வின் பேராளர் மகாநாடு இன்றும், நாளையும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ- வெ)

## பாதுகாப்பு ஊழியர் பலியானார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றும் ஒருவரும், வவனியாவில் இடம்பெற்ற துப்பாக்கி படுகொலை சம்பவத்தில், கொலைசெய்யப்பட்டுள்ளார்.

உடுவிலைச் சேர்ந்த எம்.எஸ். பரமானந்தம் (27 வயது) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சிமெந்து தொழிற்சாலை பாதுகாப்பு ஊழியர்கள்இனவேறுபாடின்றி கறுப்புப் பட்டி அணிந்திருந்தார்கள். தொழிற்சாலை வாசலிலும் கறுப்புக் கொடிதொங்க விடப்பட்டிருந்தது. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி சௌந்தரவல்லி பத்மநாதன்

நல்லூரைச் சேர்ந்த திருமதி சௌந்தரவல்லி பத்மநாதன் காலமானார். இவர் திரு பத்மநாதனின் (கூட்டுறவு எழுது வினைஞர்) அன்பு மனைவியும் மனோகர் (தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்) மாலினி, கிருபாகரன் (Merchants Finance) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிதம்பரநாதனின் (தொழில் நுட்பக் கல்லூரி கொக்குவில்) அன்புச் சகோதரியும், யாழ் மருத்துவக் கல்லூரி மாலதியின் மாமியுமாவார், அன்னாரின் பூதவுடல் இல; 11, செட்டி தெரு. நல்லூர் இல்லத்திலிருந்து ஈமைக்கிரிகைக்காக 15-9-84 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவல்களை ஏற்றுக் கொள்ளவும்.

1773

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

## இன்று நினைவு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தை மேற்கொண்டிருந்த தமிழினத்திற்கு அந்த இழிவிற்கெல்லாம் கொடுமைகளுக்கெல்லாம் காரணமாக கொடியவர் கும்பல் விதைத்து விட்டிருந்த சாதி என்று பெயர் பெற்ற சதியை, சமயம் என்ற போர்வையில் நடந்து வரும் கொடுமைகளை, இனங்கண்டு கூறினார்; எதிர்த்துச் சீறினார்; மோதிப் பொருதினார், சாதனை கண்டார்.

அங்கே தமிழகம் உதயமானது ஆனால் இங்கே.

தமிழன் அடிமைகளாய், அழிந்து கொண்டிருந்தான். தாய் நாட்டுத் தலைமைத் தமிழ் மகன் அவன்,

இங்கே இந்த சேய்நாட்டில், தமிழன் படும் அவஸ்தைகள் கண்டு துடித்தான்; கொதித்தான்.

இலங்கையில் 1958ல் நடந்த இனவெறிக் கொடுமைகளுக்குப் பலியான ''தமிழன் கொட்டும் கண்ணீராலேதான் இந்தக் கடல் உப்பானது'' என்று நெஞ்சு வெடித்துச் சொன்னார் அண்ணா.

அந்தப் பெருமகன் ஏற்றிய 'அறிவு' என்ற விளக்கு. என்றுமே அணையா விளக்கு சமத்துவ, சகோதரத்துவ பொது உடமைச் சமுதாயம் ஒன்றே அண்ணாவின் கனவு ஆகும்.

நாம் செய்யும் அண்ணாவின் பிறந்தநாள் நினைவு தினம் இன்று நிகழ்ந்து, நம் தமிழினத்துக்கு உணர்ச்சியும் உத்வேகமும் உயிர்ப்பும்தந்து நிற்றல் தனிச் சிறப்பே.

அந்தத் தெய்வத்தின் நினைவுகளால் கண்ணியம்ஆகி கட்டுப்பாட்டுடன் கடமை செய்வோமா.

வாழ்க அண்ணா நாமம்
வளர்க அவர்வழி நம் தமிழ்ச் சமுதாயம்.

## மண்டைதீவுப்...

(1-ம் யக்கத் தொடர்ச்சி)

படகொன்றை மண்டைதீவு தெற்குக் கடலில் துரத்திச் சென்ற சிவப்பு வெள்ளை நிற விமானம் மீண்டும் இக்கடலில் தாழப் பறந்து வட்டமிட்டு சிலமணி நேரம் துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டது. மாலையிலும் இவ் விமானம் இரு பிளாஸ்டிக் படகுகளை துரத்தி வந்தே இவ்வாறு பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

மினிபஸ் ஒன்றைப் பயணிகளுடன் ஆயுதப்படையினர் தமது 'ட்ரக்' வண்டிகள், கவச வாகனங்களுக்கிடையே வரச்செய்து மண்டைதீவு தெற்கு கடற்கரைவரை கொண்டு சென்றனர். வழியில் வீதியில் நின்றவர்கள், போனவர்களையும் டிரக்குகளில் ஏற்றிச் சென்றனர்.

இறுதியாக மண்டைதீவு தெற்கு கடற்கரைக்கு அருகிலுள்ள கோயிலொன்றுக்குப் பக்கத்தில் வைத்து கூட்டி வந்த அனைவரையும் சுமார் மூன்று மணிநேரத்திற்கும் மேலாக விசாரணை செய்து சோதனையிட்டபின் விடுதலை செய்தனர்.

இரு இளைஞர்களை மட்டும் அவர்கள் கைது செய்து தம்முடன் கொண்டுசென்றனர். (சூ-கி)

# இப்படியும் நடக்கிறது

சவூதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஓர் இளைஞர், தனது சொந்த ஊருக்குத் திரும்பும் வழியில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணத்தையும் வெளிநாட்டு டாலர்களையும் மற்றும் தங்கச் சங்கிலியையும் தொலைத்ததுடன் இப்பணத்துடன் கைப்பையிலிருந்த 'பாஸ்போர்ட்'டையும், விமான டிக்கட்டையும் கூட பறிகொடுத்து விட்டார் என்று இப்பத்தியில் சிலதினங்களுக்கு முன்னர் எழுதி,

''லட்ச ரூபா தொலைந்தாலும் பரவாயில்லை, எனது பாஸ்போர்ட்டையும் டிக்கட்டையும் தந்தால் போதும். நான் மீண்டும் கஷ்டப்பட்டு முன்னேறி விடுவேன்'' என்று அந்த இளைஞர் கண்ணீர் விடுகின்றார் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த விஷயம் வெளியான ஓரிரு நாட்களுக்குள் அந்த இளைஞருக்கு 'பாஸ்போர்ட்'டும், விமான டிக்கட்டும் (மட்டும்) கிடைத்துவிட்டது!

கண்டெடுத்து, வீடு தேடிச் சென்று இவற்றை ஒப்படைத்த அச்சுவேலி அன்பர்களுக்கும் ஆரியகுளம் அன்பருக்கும் மயிலிட்டி இளைஞர் தி. மோகனதாஸ் நன்றி கூறுகிறார்.

— ஊடுருவி

## கொக்குவில். .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. பஞ்சலிங்கம் நமது நிருபரிடம் இதுபற்றித் தெரிவிக்கையில்: 'கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் யாவும் பொது மக்கள் நிதியிலிருந்தே பெறப்பட்டதென்றும், இப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டமை கல்லூரிக்கு பெரியதொரு இழப்பாகுமென்றும்'' கூறினார்.

### யாழ். மத்திய கல்லூரியில் கொள்ளை

யாழ்.மத்தியகல்லூரியிலிருந்து ரோனியோ இயந்திரம், இரண்டுதட்டச்சு இயந்திரங்கள் நேற்றுப்பகல் வானில் வந்த 5 இனந்தெரியாத இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்பில் இறங்கியிருந்தனர். மாணவர் வரவு சுமார் 20 சத வீதமாகவே காணப்பட்டது.

இப்பகிஷ்கரிப்பையடுத்து நேற்று மட்டக்களப்பில் அமைச்சர் திரு. செ. இராசதுரை கலந்துகொள்ளவிருந்த நான்கு பொதுவைபவங்களும் இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டன.

வலையிறவு வவுணதீவுப் பாலத் திறப்புவிழா, பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் அமைக்கப்பட்ட வேட்ப வெட்டுவான் ஓட்டுத்தொழிற்சாலைத் திறப்புவிழா, மட்டு நகர் மணிக்கூட்டுக் கோபுர அடிக்கல்நாட்டுவிழா, கோவிந்தன் வீதிப்பாலம் அடிக்கல் நாட்டு விழா ஆகியவையே ரத்துச் செய்யப்பட்டவையாகும்

### கிளிநொச்சியில்

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் யாவும்பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவில்லை. ஆசிரியர்கள் குறைவாகவே இருந்தனர்.

## விவசாய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

குண்டு வெடிப்பு சத்தமொன்று கேட்டது. இதனைத் தொடர்ந்து நகரில் பெரும் பதட்டம் ஏற்பட்டது. (சூ)

## வீதி வேலைகள் திடீர் நிறுத்தம்

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரிய வீதிஅபிவிருத்தி வேலைகள் யாவும், மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்து நேற்றுமுதல் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நெடுஞ்சாலை திணைக்களம் பளை, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பூநகரி பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பிரதம காரியாலயம் யாழ். நகரில் இயங்கி வருகிறது. மாங்குளம் முதல் யாழ்ப்பாணம் வரை பிரதம காரியாலயத்திற்குள் அடங்கியுள்ளது.

இவ்வருடம் மே மாதம் வரை விட்டு விட்டுப் பெய்த பெரும் மழையினால் வடபகுதி வீதிகள் யாவும் பழுதடைந்து சீர் கெட்டிருந்தது, வாகனங்கள் சில இடங்களில் செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டது. இதனால் திணைக்களம் துரிதமாக வீதிவேலைகளை, அடுத்த மாரிகாலத்திற்குள் செய்துவிட நடவடிக்கை எடுத்து வேலைகள் நடந்து கொண்டுவந்தது.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடந்த சில நாட்களாக வீதி வேலைகள் துரிதமாக நடைபெற்று வந்தது. கொடிகாமத்தில், கண்டி வீதியிலும், யாழ் குடாநாட்டில் மற்றும் பல இடங்களிலும் வேலைகள் இடம்பெற்று வந்தது.

மேலிடத்திலிருந்து யாழ். குடாநாட்டில் சக வீதி வேலைகளையும் உடன் நிறுத்துமாறு பணிப்பு கிடைத்ததாகக்கூறப்படுகிறது இதைத் தொடர்ந்து திணைக்கள ஊழியர் ஜீப் வண்டிகளில் வேலை நடக்கும் இடங்களுக்கு சென்று அறிவித்ததாகவும், இதைத் தொடர்ந்து நேற்று வேலை நடக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

வீதி வேலைகளை நிறுத்துவதற்கான காரணம் பற்றி அறிவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (க)

## அதிபர் பயமுறுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இரத்தி[illegible] கடமையாற்றும் தமிழ் அதிபர் ஒருவர் மேலதிகாரி ஒருவரால் பயமுறுத்தப்பட்டு தாக்கப்பட்டதாக, புகார் செய்யப்பட்டுள்ளது

இதுபற்றி அதிபர் பாடசாலை 'லொக்புக்கில்' விபரமாக எழுதிவிட்டு, சொந்த ஊரான யாழ்ப்பாணம் வந்துவிட்டார்

இச்சம்பவம் பற்றி அவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் இது பற்றி கல்வி அமைச்சின் செயலாளருக்கு புகார் செய்து, நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (க)